**வெலிகேபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெலிகேபொல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட ரூபா 66,453 கூட்டுத்தொகையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளபடியான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத்தண்டப்பண வருமானம் என்பவை இனங்காணப்படாதிருந்ததுடன் ரூபா 06 மில்லியன் கூட்டுத்தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,232,362 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

ஆதனங்கள், பொதிகள் மற்றும் உபகரணங்களின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 50,941,371 கூட்டுத்தொகையான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி விதி 204 | 50,270 | 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்ட 03 சொத்து விடயங்களுக்குரிய 48 அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 2,595,105 | 1988 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(3) | 468,785 | 1988 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/1 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | 05 வருடங்களுக்கு ஒரு தடைவ வாடகை மீள்திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,966,680 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,924,307 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,832,725 | 9,076,249 | 7,984,217 | 4,787,515 | 4,248,500 | 8,365,512 | 7,061,067 | 4,121,595 |
| வாடகை | 2,340,297 | 1,790,628 | 1,860,149 | 159,072 | 2,716,455 | 2,071,066 | 1,884,578 | 244,435 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,155,300 | 1,422,234 | 1,422,234 | - | 931,900 | 1,130,882 | 1,180,332 | 5,000 |
| ஏனைய வருமானம் | 8,939,900 | 8,348,354 | 3,019,897 | 11,541,330 | 58,684,717 | 5,079,761 | 34,870,420 | 5,803,140 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 17 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 05 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை, பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 21 சதவீதம், 87 சதவீதம், 85 சதவீதம் மற்றும் 53 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 ஆதனவரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 4,703,281 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை வரியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 2.2.4 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 04 விளம்பர அறிவித்தல்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 190,000 கூட்டுத்தொகைகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 766,458 கூட்டுத்தொகையான நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்காக பலாங்கொடை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும், 2016 செப்தெம்பர் முதல் 2017 திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்காக எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் அறவிட வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 1,523,936 தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை பெறமுடியாமை**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெலிகேபொல வாராந்த சந்தை அபிவிருத்தி – II ஆம் கட்டத்திற்காக ரூபா 3,907,140 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்பட்ட உக்கும் கழிவுகள் திறந்த பூமியில் அகற்றப்பட்டு மண் இட்டு மூடப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது.

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

### ஊழியர் கடன்

ஓய்வு பெற்றுச் சென்றமை, பணியிடமாற்றம் பெற்றுச் சென்றமை மற்றும் சேவையை விட்டுச் சென்றமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 06 உத்தியோகத்தர்களுக்குரிய அறவீடுகள் நிலுவையாகவுள்ள கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 103,374 ஆக இருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை

சபை அதிகாரப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் சபையால் அமுல்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நீரில் பாதகமான கொலிபோம் பற்றீரியா காணப்படுவதாக நீர் மாதிரிப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அந்த செயற்திட்டம் மூலம் வழங்கப்படுகின்ற நீர் நாளாந்தம் குளோரின் இடப்படுவதாக சுகாதார வைத்திய உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் உத்தியோகத்தர்களுடன் குளோரின் இடுதல் தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நீர் குளோரின் இடுதல் முறைமையும் தொடர்ச்சியாகவும் அமுல்படுத்தாமையின் காரணமாக மக்களுக்கிடையே தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்பட்டது.

## 3.4 பெறுகைகள்

### பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 12 செலவின விடயங்களுக்குரிய ரூபா 210,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,575,000 தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் | |
|---|---|---|---|
| | ------------------------ | | ------------------------------ |
| (அ) | கணக்கீடு | (i) | செலவினம் இனங்காணப்படாமை |
| | | (ii) | வருமானம் இனங்காணப்படாமை |
| | | (iii) | பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |